# சுதந்திரன்

SUTANTIRAN

★ விலை சதம் 35. வ.ஆ.2007, சித்திரை 23, ஜ.அவ்வல் 27,(5-5-76) புதன் புத்தகம் 30, இதழ் 4


# 1977-லும் தேர்தல் வேண்டாமாம்!

## ஆளுங்கட்சி ஊர்வலத்தில் கோஷம்!

இம்முறை கொழும்பில் நடைபெற்ற சிறீ லங்கா சுதந்திரக்கட்சி — கம்யூனிஸ்ட் கூட்டு 'மே' தின ஊர்வலத்தில், 1977இலும் பொதுத்தேர்தல் வேண்டாம்'' என்று கோஷமெழுப்பப்பட்டிருக்கிறது. இது தற்செயலான ஒரு நிகழ்ச்சியல்லவென்றும், ஆளும் கட்சியிலுள்ள சிலா 1977இலும் பொதுத்தேர்தலை நடத்தாமல், தமது பாசிச ஆட்சியை நீடிக்க உள்ளிருந்தே தீட்டிவரும் சதித்திட்டத்தின் வெளிப்பாடே இந்த சுலோகம் என்றும் அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

ஆளுங்கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் சிலர் 1977 இலும் பொதுத்தேர்தல் நடத்தமாட்டோம் என்று பல்வேறு சந்தர்ப்பங்களிலும் ஏற்கெனவே பேசியுள்ளதை இவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

இந்தக் கோஷம் பற்றிக் குறிப்பிட்ட பொதுநிர்வாக உள் நாட்டமைச்சர் திரு. டி. பி. இலங்கரத்தின— இக்கோஷத்தை யெழுப்பியவர்கள் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தெரிந்தெடுக்கப்பட்ட பா. உ.க்கள் அல்லவென்றும், தமது கட்சி கோட்டைவிட்ட தொகுதிகளில்கட்சியின் அமைப்பாளர்களாக பணியாற்றுபவர்களே இத்தகையகோஷத்தையெழுப்பியதாகவும், தங்கள் கட்சி அமைப்பாளர்கள் பொதுத்தேர்தலில் வெற்றி பெற்றுப்பாராளுமன்றத்துக்கு வருவதைவிட, ஆ.

—4-ம் பக்கம் பார்க்க

## ஊர்வலத்தில் எழுப்பப்பட்ட கோஷங்கள்!

- மொழிவழி பிரிவோம் உரிமைகள் வெல்லுவோம்.
- வேண்டாம் எமக்கு சிங்களச் சோசலிசம்.
- வேண்டும் எமக்கு வீர சுதந்திரம்.
- தந்தை செல்வா தலைமையில் சொந்த அரசு அமைப்போம்.
- தமிழ் தொழிலாளரே தமிழ் வாழ உழைப்போம்.
- மொழியும் மண்ணும் காப்பது எம் கடமை.
- மொழிவழி ஒதுக்கலை என்றென்றும் எதிர்ப்போம்.
- அடக்குமுறையை அடியோடு அகற்றுவோம்.
- மலையகத் தமிழருக்குப் புதுவாழ்வு கொடுப்போம்.
- காட்டிக் கொடுக்கும் கயமையை ஒழிப்போம்
- சிறையிருக்கும் இளைஞரை விடுதலை செய்!
- தமிழ் ஈழம், அமைப்போம்!

# குடியரசு நாளில் சட்டமறுப்பு!

தமிழர் கூட்டணி நடத்த திட்டமிட்டுள்ள தொடர்ச்சியான சட்டமறுப்புத்திட்டங்கள் திருகோணமலையில் யூலாய் 3, 4ம் திகதிகளில் நடைபெறும் கூட்டணியின் சிறப்பு மாநாட்டில் இறுதியாக பூர்த்திசெய்யப்படவிருக்கிறது. இதற்கிடையில் எதிர்வரும் சிறீலங்காவின் குடியரசு நாளான மே 22ம் திகதி ஓர் அடையாள சட்ட மறுப்பை தமிழர் கூட்டணி தமிழ் ஈழத்தில் நடத்தவிருப்பதாகத் தெரியவருகிறது. இதற்கான திட்டம் தயாராகி விட்டபொழுதிலும், எதிர்வரும் மே, 14, 15,ம் திகதிகளில் வட்டுக்கோட்டைத் தொகுதியில் நடைபெறவிருக்கும் தமிழர் கூட்டணியின் முதலாவது தேசிய மாநாட்டில் இதன் மீது இறுதி முடிவு எடுக்கப்படும் என்று அறியப்படுகிறது

சிறீலங்கா குடியரசு அரசியல் சட்டம் அமுலுக்கு வந்த 1972ம் ஆண்டு மே 22ம் நாளிலிருந்து ஒவ்வோராண்டும் தமிழ் ஈழத்தில் அந்நாளை துக்க நாளாகவும், எதிர்ப்புநாளாகவும் தமிழர் கூட்டணி அனுட்டித்து வருவது தெரிந்ததே. சென்ற ஆண்டு மே 22ல் சட்ட மறுப்பு ஊர்வலம் தொடங்கப்பட்டதும், பின்னர் அது போக்குவரத்துச் சட்ட மீறலாக உருவெடுத்ததும் தெரிந்ததே.

## வட்டுக்கோட்டை மாநாட்டில் திட்டம்பற்றி இறுதி முடிவு!

இந்த ஆண்டும் எதிர்வரும் மே22ல் சட்டமறுப்புஒன்றை தமிழர் கூட்டணி நடத்தவிருக்கிறது. இதற்கான திட்டங்கள் உருவாக்கப்பட்டுவிட்டன. பெரும்பாலும் தமிழர் கூட்டணியின் அடிப்படை இலட்சியத்தை எடுத்துக்கூறும் முறையிலும், அரசாங்கம் பிறப்பித்துள்ள அவசரகாலச்சட்டத்தின் சில விதிகளை மீறும் முறையிலும் இந்தச் சட்டமறுப்பு அமைந்திருக்கும் என்று தெரியவருகிறது.

தமிழர் கூட்டணியின் பா. உ.க்கள், தலைவர்கள் அனைவரும் இந்தச் சட்டமறுப்பில் பங்கேற்கவிருக்கிறார்கள். இது ஒரு நாள் சட்டமறுப்பாக இருக்குமென்றும், யூலை மாநாட்டின் பின்னரே தொடர்ச்சியான சட்ட மறுப்பு இயக்கம் ஆரம்பமாகும் என்றும் அறியப்படுகிறது.

இந்த ஆண்டு மே 22ம் நாள் சனிக்கிழமையாக அமைவதால்; குடியரசு அரசியல் சட்டத்துக்கு தமிழ் மாணவர்களின் எதிர்ப்பைக் காட்டும் முகமாக மே 21ம் நாள் வெள்ளிக்கிழமை பாடசாலை பகிஷ்கரிப்பு நடைபெறலாம் என்றும், தமிழ் இளைஞர் பேரவை இதை முன்னின்று நடத்தும் என்றும் தெரியவருகிறது!

# தமிழ் ஈழத்தின் வரலாறு காணாத மாபெரும் 'மே' நாள் ஊர்வலம்!

## இன எழுச்சி! விடுதலை முழக்கம்! சமதர்ம சங்கநாதம்!

தமிழ் ஈழத்தின் வரலாறே இதற்கு முன் கண்டிராத அளவு தமிழின எழுச்சியும், சமதர்ம உணர்ச்சியும், விடுதலைப் பேராவேசமும் பொங்கிப் பிரவாகிக்க — தொழிலாளர் திருநாளான 'மே' நாள் விழா தமிழர் கூட்டணியினாலும், அதன் சார்பான மொழிவழித் தொழிற் சங்கங்களினாலும் யாழ்ப்பாணத்தில் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

யாழ். மாநகர வீதிகள் அதிர்ந்திட வீறுடன் நடைபெற்ற இந்த 'மே' நாள் எழுச்சி ஊர்வலம் 'இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்' என்ற வாசகத்தையே பார்ப்போர் நெஞ்சங்களில் நினைவூட்டியது. கோட்டை மைதானத்தில் நடைபெற்ற கூட்டத்தில் சுமார் 10,000 மக்கள் கலந்துகொண்டனர்.

அரசாங்க எழுதுவினைஞர் சங்கமும், ஏனைய ஒன்பது மொழிவழித் தொழிற் சங்கங்களும் கூட்டாக தமிழர் கூட்டணியின் ஆதரவுடன் நடாத்திய இம் 'மே' நாள் ஊர்வலம் யாழ்ப்பாண வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தையே உருவாக்கி விட்டது. ஊர்வலம் செல்லும் பாதையடங்கிலும் மகரதோரணங்களாலும் உதயசூரியன் கொடிகளாலும் எழுச்சி சுலோகம் பொறித்தபதாகைகளாலும் ஆங்காங்குள்ள பொது மக்களும், வர்த்தகர்களும், இளைஞர்களும் அலங்கரித்திருந்தனர்.

ஊர்வலம் ஆரம்பமாகவிருந்த நாச்சிமார் கோவில் வீதியில் கலை அரங்கம் ஒன்று அமைக்கப்பெற்று அதில் இசை நிகழ்ச்சிகள்

—4-ம் பக்கம் பார்க்க

## நேர அனுமதியிலும் பாகுபாடு!

'மே' திருநாளில் கூட்டங்களுக்கு ஒலிபெருக்கி பாவிப்பதற்கு வழங்கப்பட்ட அனுமதியிலும் தமிழ் ஈழம்—சிங்களம் என்ற பாகுபாடு பொலிசாரால் பின்பற்றப்பட்டது. கொழும்பில் நடைபெற்ற மேதினக்கூட்டங்களுக்கு நள்ளிரவுவரை ஒலிபெருக்கி பாவிப்பதற்கு அனுமதியளித்த பொலிசார் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மே நாள் கூட்டங்களுக்கு இரவு 8 மணிவரை மட்டுமே ஒலிபெருக்கி அனுமதி வழங்கியிருந்தனர்.

## தமிழர் கூட்டணி தேசிய மாநாட்டுக்கு பிரேரணைகள் அனுப்புவதில் கிளைகள் தீவிரம்!

கடந்த செவ்வாய்க்கிழமை 27-4-76 அன்று தமிழ் இளைஞர் பேரவையின் கொழும்புக் கிளையின் செயற்குழு கூடி பல பிரேரணைகளை மே மாதம் நடைபெறவிருக்கும் தமிழர் கூட்டணியின் தேசிய மாநாட்டில் சமர்ப்பிப்பதற்கென செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கத்திற்கு அனுப்பிவைத்தது. எல்லாப் பிரேரணைகளும் நீண்ட நேரம் அலசி ஆராயப்பட்டு ஏகமனதாக முடிவெடுக்கப்பட்டன. மேற்படி கூட்டத்திற்கு கிளையின் தலைவர் ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன் தலைமை வகித்தார். இதே போல இன்னும் ஏராளமான தமிழ் இளைஞர் பேரவை, தமிழர் கூட்டணிக் கிளைகளும் மாநாட்டுக்கு பல்வேறு பிரேரணைகளையும் அனுப்பிக்கொண்டிருக்கின்றன தமிழர் கூட்டணியின் கொழும்புக்கிளையும் விரைவில் தனது பிரேரணைகளை அனுப்பவிருக்கிறது.

## இ. போ. ச. பஸ்கள் தெற்கே சென்றன!

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெரும்பாலான இ. போ. ச. பஸ்கள் 'மே' திருநாளைக்கொண்டாடுவதற்கென தெற்கே அனுப்பப்பட்டுவிட்டதால், யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மே நாள் கூட்டங்களுக்கு செல்ல முடியாமல், வெளியூர் மக்கள் மிகுந்த கஷ்டத்துக்குள்ளாயினர். கூட்டத்துக்கு வந்தவர்களும் கூட்டம்முடிந்து திரும்பிப்போக பஸ் இன்றி வெகுநேரம் காத்துக் கிடந்தனர். பஸ் சேவை தடையின்றி நடந்திருந்தால், இன்னும் பல்லாயிர மக்கள் தமிழர் கூட்டணின் மே தினக் கூட்டத்துக்கு வந்திருப்பார்கள் என்று கூட்டணி பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

● ஆசிரியருக்குக் கடிதம்

## பிரதமரின் முரண்பாடு!

21-4-76 இதழ் கண்டேன். அதில் பிரதமர் தனிநாடு கோரிக்கை பற்றிக் கூறும் போது ஒரு சிலரே இதற்கு ஆதரவளிப்பதாகவும், இது ஒரு தேர்தல் தந்திரம் என்றும் இதனை முன்வைத்தே வாக்குகளைப்பெற எண்ணுகின்றனர் என்றும் கூறியிருப்பதாகக் கண்டேன்.

இக்கோரிக்கையை முன்வைத்தே வாக்குகளைப்பெற எண்ணுகின்றனர் என்று கூறும பிரதமர், பின்பு ஒரு சிறு பகுதியினரே இதனை ஆதரிக்கின்றனர் என்றுகூறுவது முன்னுக்குப் பின் முரணாகத் தோன்றவில்லையா, ஒருசிலரே ஆதரிக்கும் ஒரு கோரிக்கையை முன்வைத்து எப்படிப் பெரும்பான்மை வாக்குகள் பெற்று வெல்ல முடியும். இதனை சிந்தித்துக் கூறுவதில்லையா? அல்லது சிந்திக்கும் தன்மையே இல்லையா? அப்படியானால் எப்படிப் பிரதமர் பதவியைப் பிடித்துக் கொண்டிருக்கிறார்?

—ஜெரூட் என். எஸ்.

35/5. காலி வீதி,
தெஹிவளை.

●

## லொத்தர் சபை தமிழை புறக்கணித்தது

அன்புள்ள ஐயா,

அட்டன் மாநகரில் 24.4.76ல் தேசிய லொத்தர் சபையின் 564வது சீட்டிழுப்பு நடைபெற்றபோது சகல நிகழ்ச்சிகளிலும் தமிழ் புறக்கணிப்பு செய்யப்பட்டது, தமிழர்களின் மனதை புண்படுத்தும் நிகழ்ச்சியாக இருந்தது கவலைக்குரியதாகும்,

அதோடு விழா இறுதியில் நடைபெற்ற இரண்டு மணிநேர 'பொப் இசை' நிகழ்ச்சியின்போது ஒரு தமிழ் பாடல்சரி இடம் பெறவில்லை; சிங்கள பாடகரிகளின் பெயர்களை திரு. சில்லையூர் செல்வராசன் தமிழில் அறிவித்தார், அவருக்கு ஏன் இந்தவேலை?

அட்டன் நகரில் 60% வீதமானோர் தமிழர்களே வசிக்கிறார்கள். அப்படி இருந்தும் சகல நிகழ்ச்சிகளையும் ஏன் சிங்களத்தில் நடத்தவேண்டும்? இது திட்டமிட்ட 'தமிழ் புறக்கணிப்பு' செயலாளனக்கேட்கவிரும்புகிறோம். விழா இறுதியில் இனியும் இப்படியான 'தமிழ் புறக்கணிப்பு' வேலைகளை மலையகத்தில் செய்யவேண்டாம் என நாம் திரு. சில்லையூர் செல்வராசனிடம்முறையிட்டபோது அதற்கு அவர் ஏதோ சிரித்து சமாளித்தார்.

இதுபற்றி தேசிய லொத்தர் சபையும் சம்பந்தப்பட்ட பிரமுகர்களும் நடவடிக்கை எடுப்பது அவசியமாகும்.

—எஸ். ரீ. சேதுபதி.

பெயிலி வீதி,
தாவலப்பிட்டி.

# பல்கலைக்கழகக் கோரிக்கையும் தமிழனுக்கு விழுந்த அடியும்!

அனைத்துலக நீதிச்சபையின் முன் இலங்கைத் தேசியத் தமிழர் விவகாரச் சபையினரால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையொன்றில், தற்போதைய தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் பல்கலைக் கழகங்களில் நுழைவதற்கு ஏதுவாக க. பொ. த. பத்திர (உயர்தர)ப் பரீட்சையில் ஒவ்வொரு சமூகத்தினரும் எடுக்கவேண்டிய புள்ளிகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவை பின்வருமாறு:-

| பாடங்கள் | சிங்கள மாணவர் | தமிழ் மாணவர் |
|---|---|---|
| வைத்தியம் | 229 | 250 |
| பௌதிகம் | 183 | 204 |
| உயிரியல் விஞ்ஞானம் | 175 | 184 |
| பொறியியல் | [illegible]27 | 250 |
| மிருக வைத்தியம் | 181 | 206 |
| கட்டடக் கலை | 180 | 194 |

இத்தகைய தரப்படுத்தல் நடைமுறைகளினால் மனம் கொதிப்படைந்திருந்த தமிழ் மக்களைச் சிறிதளவேனும் சாந்தப்படுத்தும் நோக்குடன், யாழ்நகரில் ஓர் பல்கலைக்கழக வளாகமொன்றினைத் திறந்து வைப்பதற்காகத் திருமதி. பண்டாரநாயக்கா அவர்கள் 1974ல் அங்கு விஜயமொன்றை மேற்கொண்டார். பிரதமர் என்ற முறையிலே தமிழர்களின் பலம் வாய்ந்த கோட்டைக்குள் அவர் பிரவேசித்தது இதுவே முதல் தடவையாகும். அங்கு திரண்டு நின்றபெருங் கூட்டத்தைப் பார்க்கும்போது அரசாங்கம் அளித்த இச் சலுகைக்கு ஓரளவு வரவேற்பிருப்பது போலவே தோன்றினாலும் தேசிய உணர்வு படைத்தபெரும்பாலான தமிழ் மக்கள் இந் நிகழ்ச்சியை சந்தேகக் கண்கொண்டே நோக்கினர்.

இவர்களுடைய இந்த நியாயமான சந்தேக உணர்வுகள் யாவும், முன்னை நாள் பல்கலைக்கழகக் கல்வித் துறைப் பேராசிரியரும் தமிழ் மக்களினால் அதிகார பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட கல்விமானுமாகிய திரு. கே. நேசையா அவர்கள் மூலமாகப் பிரதிபலித்தன. அவருடைய கூற்று பின்வருமாறு:-

"கடந்த ஐம்பது வருடங்களாக எங்களுக்கென ஓர் சொந்தப்பல்கலைக் கழகம் வேண்டும் என்ற கோரிக்கையின் எதிரொலியாக இப்போது நமக்குக் கிடைத்திருக்கும் இந்த வளாகம் உண்மையில் பெரும்மோசடியே! முற்றிலும் விஞ்ஞான வளாகமாகவே இது அமையும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் இங்கு போதிக்கப்படுபவை வெறும் தூய, ஆரம்ப கணிதவியலும், புள்ளி விபரவியலும் மாத்திரமே என்று தெரிய வருகிறது. தற்போதைக்கு 135 மாணவர்களே இங்கு அனுமதிக்கப்படுவர் எனினும் இத்தொகை பின்னர் 400ஆக இருக்கும். ஆனால் இவர்களில் தமிழர்களின் எண்ணிக்கை எப்போதும் ஐந்திலொருபங்கினதாகவே இருக்கும். இதற்கெனப் புதிய கட்டடங்கள் எவையுமே உருவாக்கப்படவில்லை. மாறாக நடுத்தரக் கல்வித் துறையில் ஆசியாவிலேயே மிகச் சிறந்ததாகவும், தமிழ் மக்களின் கல்வித்துறையைப்பொறுத்தமட்டில் மிக நீண்ட காலமாகச்சேவையாற்றி வந்ததுமான யாழ் கல்லூரியிலேயே இவ்வளாகம் அமைக்கப்பட்டிருக்கிறது. இது தமிழ்க் கல்வித் துறைக்கு விழுந்த ஒரு பலத்த அடியாகும். இப்போது இந்த யாழ் கல்லூரி வெறுமனே ஓர் உயர்தரப் பாடசாலையாக மட்டுமே விளங்கும். இன்னும் இரண்டு வருடங்களில் இது இங்கிருந்து அகற்றப்படும் அல்லது முற்றாகவே "ஒழிக்கப்படும்"

"நாட்டின் ஒரே உத்தியோக மொழியை அந்நாட்டின் சகல பாடசாலைகளிலும் போதிப்பதில் தோல்வி கண்ட ஒரே நாடு உலகில் இலங்கை மட்டுமே" இவ்வாறு தமிழ் எழுத்தாளர் ஒருவர் சுட்டிக்காட்டுகிறார். இதுமுற்றிலும் உண்மையே! வடமாகாணப் பாடசாலைகளில் சிங்கள மொழியை அறிமுகப்படுத்துவதற்கு எதிராக மேற்கொள்ளப்

## பகுதி (11)

பட்ட கிளர்ச்சிகளின் விளைவாகவே அரசாங்கத்துக்கு இப்படியொரு முட்டுக்கட்டை ஏற்பட்டது. ஆனால் அரசாங்கமும் சிங்களமொழியைக் கட்டாயமாக்குவதற்கு எத்தகைய நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. இதனால் தமிழ் மாணவர்கள் அரசாங்க உத்தியோகத் துறையைப் பொறுத்தமட்டில் மிகப் பின்தங்கிய நிலைக்குத் தள்ளப்பட்டதோடு மல்லாமல், அவர்களுடைய மனநிலையும் சீர்கெடத் தொடங்கியது. —வளரும்

விக்டர் ஐவன் அறிக்கை

## ● மட்டக்களப்புச் செய்திகள்

### தமிழ் இளைஞர் பேரவைத் தலைவருக்கு வேலையில் இருந்து இடை நிறுத்தம்!

மட்டக்களப்பு தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் கா. அன்ரன் அவர்கள் நெற் சந்தைப்படுத்தும் சபையில் (மட்டுநகர்) பாதுகாப்பு உத்தியோகத்தராகக் கடமை புரிந்து வருபவர். 27-4-76 தொடக்கம் இவர் வேலையினின்றும் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக நெற்சந்தைப்படுத்தும் சபையின் மட்டக்களப்புப் பிராந்திய முகாமையாளர் அறிவித்தல் கொடுத்துள்ளார். திரு. கா. அன்ரன் அவர்கள் கடந்தவருடம்மே மாதம் குடியரசு தினச் சம்பவங்களின்போது துண்டுப் பிரசுரம் விநியோகித்தார் என்ற குற்றச் சாட்டின் மீது கைதுசெய்யப்பட்டு ஒரு வாரகாலம் விளக்க மறியலில் இருந்தது குறிப்பிடத்தக்கது. அந்த வழக்கு இன்னமும் முடிவடையாமல் இருந்து வருகின்றது. அதிகாரம் படைத்தவரின் ஆட்டங்களில் இது ஒன்று என மட்டக்களப்பு வட்டாரத்தில் பரவலாகப்பேசப்படுகின்றது.

### கல்லடி பகுதியில் பெரும் கொந்தளிப்பு

இளைஞர்கள் சிலரைத் தேடுவதென்ற சாட்டில் கல்லடி, நொச்சிமுனைப் பகுதியில் உள்ள சாதாரண அப்பாவிப்பொது மக்கள் துன்புறுத்தப்படுகின்றார்களாம். பகல் வேளைகளில் மாத்திரமன்றி நள்ளிரவ வேளைகளிற் கூட பொலிசார் தேடுதல் வேட்டை நடத்துகின்றார்களாம். தேடுதல் செய்வதாகக் கூறிக்கொண்டு பீயாரின் கையாட்களும் காடைத்தனங்கள் புரிந்துவருகின்றனராம். பொலிஸ் பகுதியினர்க்குரிய அதிகாரங்களையும் பீயாரின் கையாட்களுக்கு அரசாங்கம் வழங்கியுள்ளதா என துன்புறுத்தப்படும் அப்பாவிப் பொதுமக்கள் கேட்கிறார்கள்.

### பீயாரின் கையாட்கள் சவரம் செய்கின்றார்களாம்!

இது வரைகாலமும் பொதுமக்களையும் கூட்டணிக் காரர்களையும் அடித்துத் துன்புறுத்திவந்த பீயாரின் காடையர்கள் இப்பொழுது சவரத்தொழில் செய்வதிலும் ஈடுபட்டுள்ளார்களாம். 13-4-76ல் ஏறாவூரில் இடம்பெற்ற தமிழர் கூட்டணிக் கூட்டத்தில் கலந்துகொண்டவர் எனக் கருதப்படும் யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த வாலிபர் ஒருவருக்கே மேற்படி காடையர்கள் சவரத்தொழில் செய்தனராம்; ஏறாவூர்ப் பகுதியில் உள்ளூராட்சி மன்றமொன்றில் கடமை புரிகின்ற வாலிபர் 18-4-76ல் மட்டக்களப்பில் ஹோட்டல் ஒன்றில் [illegible] டிருந்த சமயம் பீயாரின் கையாட்கள் இருவர் வாலிபரைத் தாக்கியுள்ளனர். வாலிபர் உயிரைக் காப்பாற்றுவதற்காக ஓடின சமயம் ஜீப்பில் வந்து சேர்ந்த மற்றும் காடையர்களும் சேர்ந்து அவரைப் பலவந்தமாக ஜீப்பில் ஏற்றிச்சென்று அவரின் தலைமுடியையும், தாடியையும் கத்தரித்து கடதாசி ஒன்றினுள் சுற்றிக் கொடுத்து "கொண்டு சென்று இராஜதுரையிடம் கொடடா" என்று கூறி அனுப்பி வைத்தார்களாம்.

இது சம்பந்தமாக மட்டக்களப்புப்பொலிசில் முறைப்பாடுசெய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து பட்டப்பகல் வேளைகளிலும் கூட பீயாரின் கையாட்கள் காடைத்தனங்கள் புரிவதனால் மட்டு

—3-ம் பக்கம் பார்க்க

### செருப்படி மறந்ததேனோ?

"சிங்களத் தலைமைகளினால் தமிழர்களுக்கு எந்த விதமான நன்மையும் கிடைக்கப்போவதில்லை. தமிழர்கள் தங்கள் உரிமைகட்காகப் போராடவேண்டுமானால், தமிழர் கூட்டணி மூலமே போராடவேண்டும் —உரிமைகளைப் பெறவேண்டும்" என்ற நன்னோக்கோடு தான் சார்ந்திருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை விட்டு விலகி, தமிழர் கூட்டணியில் சேர்ந்து இன்று இயக்கத்தின் வளர்ச்சிக்காக தீவிரமாக உழைத்து வருபவர் திரு. கணேசலிங்கம். இவரின் தீவிரப்போக்குக்கு ஈடுகொடுக்க முடியாததினாலோ என்னவோ, சமீபகாலமாக மட்டக்களப்பு முட்டாள் அவரோடு சில சில்லறைச் சேட்டைகள் விடத்தொடங்கியுள்ளாராம். நேருக்கு நேர் நின்று மோதத் துணிச்சலில்லாத ஈனப்பிறவி கூட வந்தவர்களை அடிவாங்க விட்டுவிட்டு, செருப்படியோடு ஜீப்பிலேறி மாயமாய் மறைந்த 'வீராதி வீரன்' இப்போது தொலைபேசி மூலம் சேட்டைகள் விடத்தொடங்கியுள்ளதாம்.

"தொலைபேசியில் கணேசலிங்கத்தை விசாரிப்பது, தூசண வார்த்தைகளால் அவரை ஏசுவது போன்ற சிறு பிள்ளைத்தனமான சேட்டைகளில் இறங்கியுள்ளாராம். செருப்படிப் புராணத்தை இந்தப்பிறவி மறந்திருந்தால் மீண்டும் நினைவுபடுத்திக் கொள்ளட்டும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "பேயுடன் சேர்ந்தும் சுதந்திரம் பெறுவோம்!"

# கொழும்புத்துறையில் சிந்தனைச்சிற்பி தெளிவுரை!

"பேயோடு சேர்ந்தும் சுதந்திரம் பெற்றே தீருவோம். நாம் நடத்திவருகின்ற நடத்தப் போகின்ற போராட்டங்களில் பலாத்காரத்திற்கு இடமேயில்லை. காந்தி காட்டிய அன்பு வழியில் அகிம்சைவழியில்தான் நாம் சென்றுகொண்டிருக்கிறோம். காந்தியடிகள் நடத்திய அகிம்சைப் போராட்டத்தின் போதுகூட சிலர் பலாத்காரத்தை நாடினர். அதேபோல தமிழ் இளைஞர்களில் ஒரு பகுதியினர் பலாத்கார வழியையே விரும்புகின்றனர். அதை எம்மால் தடைசெய்ய முடியாது."

கொழும்புத்துறை சுவாமியார் வீதியிலுள்ள திரு. எஸ். சரவணமுத்து அவர்களது இல்லத்தில் நடைபெற்ற தமிழர் கூட்டணிக் கருத்தரங்கில் உரை நிகழ்த்திய சிந்தனைச் சிற்பி திரு. சி. கதிரவேற்பிள்ளை பா. உ. மேற்கண்டவாறு கூறினார்.

கொழும்புத்துறை தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் திரு. செ. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் திரு. கதிரவேற்பிள்ளை மேலும் பேசுகையில் கூறியதாவது:—

அன்பு வழியில், அகிம்சை வழியில் நடத்தப்படுகின்ற எந்தப் போராட்டங்களுக்கும் வெளிநாடுகளின் ஆயுத உதவிகள் எதுவும் தேவையில்லை, அதனை நாம் எதிர்பார்க்கவும் இல்லை. வெளிநாடுகளின் தார்மீக ஆதரவு மட்டும் நமது பக்கம் இருந்தால் போதுமானது.

நாம் நடத்துகின்ற போராட்டங்களுக்கு வெளிநாடுகள் ஆயுத உதவி செய்ய முன் வந்தாலும் தமிழ் மக்கள் பலாத்கார வழியைப் பின்பற்றத்தயாராக இல்லை. வெளிநாட்டு உதவிகளுடன் ஆரம்பிக்கின்ற எந்தவொரு போராட்டங்களும் உள்நாட்டுப் பிரச்சினை என்கிற அளவில் மட்டும் நின்று விடுவதில்லை.


தமிழினத்தின் விடுதலைக்கு பலாத்கார வழியே சிறந்தது என நம்புவோர் தங்கள் வழியிற்செல்லட்டும். பலாத்காரப் போராட்டத்திற்கு ஆயுதம் வேண்டும்; அத்தோடு போராட்ட வீரர்களுக்கு சிறந்த பயிற்சியும் வேண்டும்; இவை ஒன்றும் எம்மிடத்தில் இல்லை. அது மட்டும் அல்லாமல் இரு நாடுகளுக்கிடையே பலாத்காரப் போராட்டம் நிகழுமானால் நிச்சயம் பல வெளிநாடுகளின் தலையிடுகளும் இருந்து கொண்டேயிருக்கும். அதுவும் எமது நாடு இந்து சமுத்திரத்தின் மத்தியில் இருக்கிறது. இலங்கையில் பலாத்காரப் போராட்டம் என்றால் எத்தனையோ நாடுகள் இதில் தலையிட்டு கலங்கிய குட்டையில் மீன் பிடிக்க காத்திருக்கின்றன.

எனவே எமது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நாம் பலாத்காரத்தை விரும்பவில்லை. நாம் கடந்து வந்த பாதை அகிம்சை வழியிலானது, எமது தமிழினத்தின் சுதந்திரத்தை அன்பான வழியில் — அமைதியான முறையிலேயே அடைய முயற்சிக்கிறோம்:

ஈழவேந்தன் பேசுகையில்

½ பரப்புக்காணிக்காக அயலவனோடு ஆண்டுக் கணக்காகப் போராடி கோடேறி ஆயிரக்கணக்கில் செலவு செய்வதற்கு ஆயத்தமாயுள்ள தமிழன் தன் மரபு வழித்தாயகத்தின் ஆயிரம் ஆயிரம் ஏக்கர்கள் மாற்றானால் நாள் தோறும் பறிக்கப்படுவதைப் பற்றி எண்ணிக் கவலைப்பட மறுக்கிறான். இது தமிழன் சிந்திக்க மறந்துவிட்டான் என்பதைக் காட்டுகிறதா அல்லது தமிழனின் எல்லை மீறிய தன்நலம் அவன் அறிவை மறைக்கிறதா என்பது பெருங்கேள்வியாய் விளங்குகிறது என்று கூறினார்.

யாழ்ப்பாணத்தின் பொருள்வளத்தைப் பற்றி ஈழவேந்தன் மேலும் பேசுகையில் 1975ல் யாழ்ப்பாணத்தில் 55 நிலையங்களில் நாளுக்கு 6,000 இருத்தல் என்ற அடிப்படையில் பனங்கட்டி உற்பத்தி செய்யப்பட்டு ரூ. 60 இலட்சத்திற்குவிற்பனையாகியுள்ளது.



இதைவிட கருப்பனி இறக்கியதற்கு மேலதிக வருவாயாக ரூ. 35 இலட்சம் கள் இறக்குவோருக்கு வழங்கப்பட்டுள்ளது:

அது மட்டுமல்ல 1976ல் ஏற்கெனவே 95 நிலையங்கள் பனங்கட்டி உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன. ஆண்டு முடிவிற்குள் 125 நிலையங்கள் இயங்க இருக்கின்றன.

இவ்வாண்டில் பனங்கட்டியின் நாளாந்த உற்பத்தி ஏறக்குறைய 11,200 இருத்தல்களாகும். மேற்குறித்தவை நீங்கலாக மேலும் 5 பனஞ் சீனி உற்பத்தி நிலையங்கள் தோன்றியுள்ளன; இவற்றின் உற்பத்தி நாளாந்தம் 550 இருத்தல்களாகியிருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும் 250 நிலையங்களைத் திறப்பதற்குரிய வாய்ப்புகள் உண்டு. இவை நடைமுறைக்கு வரின் வட மாகாணம் சீனி உற்பத்தியில் தன்நிறைவு காணும். இவையெல்லாம்தமிழ் ஈழத்தின் வியத்தக்க பொருள்வளத்தை உலகிற்கு எடுத்துக்காட்டுகிறது" என்று ஈழவேந்தன் கூறிமுடித்தார்.

## கட்டுரைப்போட்டி முடிவுகள்

தந்தை செல்வாவின் 79வது பிறந்த நாட் பெருவிழாவை யொட்டி தமிழ் இளைஞர் பேரவையின் நெடுங்கேணிக்கிளை நடாத்திய கட்டுரைப் போட்டியில் பின்வருவோர் முதல் ஐந்து இடங்களில் வெற்றி பெற்றுள்ளதாக மேற்படி பேரவைத் தலைவர் திரு. பீற்றர் பொன்கலன் அறிவிக்கிறார்.

1 எஸ். பெனடிக்ற் புனித செபஸ்தியார் கோவில் வீதி மன்னார் (2) செல்வி க. சபாரெட்ணம், சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய், (3) பொன்கை சிவபாலன், நீர்கொழும்பு, (4) பண்டிதர் வே. கந்தையா, தெல்லிப்பளை (5) செல்வி திரேசா ஜெயசீலி, செபஸ்தியாம் பிள்ளை வித்தியாலங்கார வளாகம், களனி.

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

களுத்துறை வேலாபுர சிறீ கதிர்வேலாயுதசாமி தொண்டர்சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் மேற்படி ஆலயமண்டபத்தில் 9.5.76 பிற்பகல் 3 மணிக்கு திரு.வே.முருகேசபிள்ளை தலைமையில் நடைபெறும்.

## மணிவிழாவா? பனி விழாவா?

### ஏமாற்று நாடகம் அம்பலம்!

வட்டுக்கோட்டை பா. உ. தியாகராசாவுக்கு கொழும்பில் மணிவிழா என்னுதடல்புடலாகவிளம்பரம் செய்தவர்களின் போலித்தனமான ஏமாற்று வித்தையை அதன் சூடு ஆறு முன்னரே அம்பலத்துக்கு கொண்டுவந்துவிட்டார்கள் சில்லாலை மக்கள்! இல்லாத ஏமாற்றுவித்தை காட்டி — விழாவுக்குசெல்ல ஒப்புதல் அளிக்காதவர்களெல்லாம் விழாவில் கலந்துகொள்ளப் போவதாக செய்தி பரப்பி தியாகராசாவின் எடுபிடிகள் ஆடி முடித்த கபட நாடகம் பரிசை கேடான முறையில் அம்பலமாகிவிட்டது. இதை அம்பலப்படுத்தியவர்கள் தமிழர் கூட்டணியின் அசைக்கமுடியாத ஆதரவாளர்கள் நிறைந்த சில்லாலையூர் மக்கள்!

27-3-76 வீரகேசரிக்கு சில்லாலை சமூக சேவா (வெளியூர்) சங்கத்தின் செயலாளர் ச. இ. வேதநாயகம் அவர்களும் தலைவர் எஸ். கிறிஸ்தோப்பர் அவர்களும் கூட்டாக எழுதியிருந்த கடிதம் "பனிப்புகாரை" கலைத்துவிட்டது. அவர்கள் அக்கடிதத்தில் பின்வருமாறு கூறியிருக்கிறார்கள்.

1976-4-22ம் திகதிய 'வீரகேசரி' வெளியீட்டின்படி வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ. தியாகராசாவின் மணிவிழாவில் எமது சங்கம் பங்குபற்றுவதாகவோ, மலர் மாலை சூட்டுவதாகவோ தீர்மானிக்கவில்லை.

திரு. எஸ். கிறிஸ்தோப்பர் அவர்களைத் தலைவராகக் கொண்ட மேற்படி எமது சங்கத்தையே தவறாக சில்லாலை வெளியூர் வாலிபர் சங்கம் எனக் குறிப்பிட்டிருப்பினும் எமது தலைவர் கொழும்பில் நடந்த மேற்படி மணிவிழாவில் பங்குபற்றவோ, மலர் மாலை சூட்டவோ இல்லை என்பதைத் தங்களுக்கு அறியத் தருகிறோம்.

## இளைஞர் பேரவை கிளை அங்குரார்ப்பணம்

கட்டுவன், மயிலிட்டி தெற்கு, வறுத்தலை விழான் தமிழ் இளைஞர் பேரவைக் கிளைக் குழு அங்குரார்ப்பணக் கூட்டம் 24.4 76இல் நடைபெற்றது. அதில் பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகஸ்தராக ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டார்கள்.

தலைவர்: சிவ. சிவஞானம், செயலாளர்—த. பாலகிருஷ்ணன், பொருளாளர்— சி. கணேசலிங்கம், துணைத்தலைவர்— சி. கிருஷ்ணமூர்த்தி, துணைச்செயலாளர் — ம; மகேந்திரன், செயற்குழு உறுப்பினர்கள்:- ஆ. நாகராஜ், மு. ரத்னகுமார், மு. தனபாலசிங்கம், மு. இராசசிங்கம், மு. அரிச்சந்திரன், த. ஜெயரத்தினம்.

———

## பீயாரின் கை...

—2-ம் பக்கத் தொடர்

நகரில் பொதுமக்களும், குறிப்பாக யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த அரசாங்கஊழியர்களும் தெருவீதிகளில் நடமாட முடியாமலிருக்கின்றது. கண்டும் காணாமல் நடந்துகொள்ளும் மடடக்களப்புப்பொலிஸ் பகுதியினர் எவ்வளவு காலத்திற்குத்தான் வாய்மூடி மௌனிகளாக இருக்கப்போகின்றார்கள் என பாதிக்கப்பட்டவர்கள் கேட்கின்றார்கள்.

# ஊரைதீவில் அரசு எடுபிடிகளை ஓடவிரட்டினர் ஊர் மக்கள்!

தமிழர் கூட்டணியின் பாசறைகளில் ஒன்றாய் விளங்கிவரும் ஊரை தீவுக் கிராமத்தில் சுயநலநோக்கோடு, அரசின் எடுபிடி ஒன்றுக்கு மேடைகொடுக்க நால்வர்கொண்ட சிறு கூட்டம் செய்த முயற்சி பொதுமக்களுடைய பலத்த ஆட்சேபனையின் பின் நிறுத்தப்பட்டது.

தங்களது சுயநலத்தைப் பூர்த்தி செய்வதற்காக இச் சிறு கூட்டம் ஊரைதீவு சனசமூக நிலையத்தையும், நாடகம் நடிக்க வேண்டுமென்ற கலை ஆர்வத்தோடிருந்த தமிழ் உணர்ச்சிமிக்க சிறார்களையும் பயன்படுத்த விரும்பினர்.

இவர்களது அழைப்பை ஏற்க மறுத்த திரு. கா. பொ. இரத்தினம் அவர்களும்,திரு. எஸ். சே. மகேந்திரன் போன்ற இளைஞர்களும் துரோகிகளோடு மேடையில் பேசத்தாம் தயாரில்லை என்று பகிரங்கமாக அறிவித்தனர். இதன் பிரதிபலனாக உணர்ச்சி கொண்ட இளைஞர்கள் சிலர் இவ்விழாவைப் பகிஷ்கரிக்குமாறும் பொதுமக்களைத் துண்டுப் பிரசுரமூலம் கூறினர். நாடகத்தில் நடிக்க இருந்த சிறார்களுக்கும் இந்தத் துரோகியின வருகையில் தாக்கம்பற்றி எடுத்துரைக்கப்பட்டது.

இதன் காரணமாக காசி ஆனந்தன், மாவை சேனாதிராசா, வண்ணை ஆனந்தன் போன்றோரைச் சிறையில் வைத்து வாட்டும் அரசியல் கட்சியின் எடுபிடி ஊரைதீவுக்கு வரக்கூடாது என்று உள்ளும் புறமும் எதிர்ப்பு வெடித்ததைத் தாக்குப்பிடிக்க முடியாத இச்சிறு கூட்டம் விழாவை [illegible] செய்துவிட்டு [illegible] களிடம் விழாவுக்காகச் சேர்த்த பணத்தில் தமிழர் கூட்டணியையும், தமிழரசுக் கட்சியையும் கன்னா, பின்னா என்று தாக்கி பிரசுரம் ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

தாங்களாகவே விழாவை நிறுத்திய இச்சில்லறைகள்; தங்களது இயலாமையை மறைப்பதற்காக தங்களை விழா நடத்த விடாது தடுத்ததாக பொய்க் குற்றச்சாட்டொன்றையும் உருவாக்கி திருவாளர்கள் எஸ். கே. மகேந்திரன், அ. சண்முகநாதன், எஸ். கே. ஸ்ரீஸ்கந்தராசா, ஐ. குலேந்திரன், பொ. நாகேசு ஆகியோருக்கு எதிராக ஊர்காவற்றுறைப் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றையும் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த சுயநலப் பித்தர்களின் கோழைத்தனமான செயல் கண்டு — கிராமத்து நலனுக்காகக, நாட்டு மக்களின் முன்னேற்றத்துக்காக நாளும் பொழுதும் உழைக்கும் நல்லவர்களை பொலிஸ் [illegible] ஊரே கொதிப்படைந்துள்ளது.

## ஆரையம்பதியில் கறுப்புக் கொடி

சமீபத்தில் விளையாட்டு விழாவில் கலந்துகொள்ள ஆரையம்பதிக்கு விஜயம் செய்த பீயார் செல்வநாயகத்தை கறுப்புக்கொடிகளே வரவேற்றனவாம். கிராமம் பூராவும் நிறைந்திருந்த கறுப்புக்கொடிகளை காக்கிச் சட்டைக்காரர்களும், அவரது கையாட்களும் சிரமப்பட்டுக் கழற்றினார்களாம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

சுதந்திரன்
SUTANTIRAN

## கொழும்பில் கருத்தரங்கு

கொழும்பில் தந்தை செல்வாவின் இல்லத்தில் இன்று (5—4—76) நடைபெறும் வாராந்தக் கருத்தரங்கில் அமரர் கோப்பாய்க்கோமான் வன்னியசிங்கத்தின் சகோதரர் திரு. கு. பாலசிங்கம், 'அரசாங்கத்துறையில் தமிழர் நிலை' எனும் பொருள் பற்றி கருத்துரை வழங்குகிறார். இக்கருத்தரங்குக்கு ஈழவேந்தன் தலைமை வகிக்கிறார்.



## உடைந்து கிடக்கும் நினைவுச்சின்னத்துக்கு ஊர்வலத்தினர் மலரஞ்சலி!

தந்தை செல்வா, நாவலர் அமிர்தலிங்கம், உடுப்பிட்டி சிவா மற்றும் தமிழர் கூட்டணித் தலைவர்கள் தலைமை தாங்கிவர, யாழ். கோட்டை மைதானத்தையடைந்த மே நாள் ஊர்வலம், நேரே பொதுக்கூட்ட மேடைக்கு செல்லாமல் யாருமே எதிர்பார்க்காத முறையில் பொலிசார் திகைத்து நிற்க, கைகளில் மலரேந்தியபடி உலகத் தமிழ் மாநாட்டுத் தமிழ்த் தியாகிகளின் நினைவுச் சின்னத்தை நோக்கி முன்னேறினர். ஆட்சியாளரால் அடித்து நொருக்கப்பட்டு சரிந்து கிடக்கும் அந்த நினைவுத் தூணடியில் தந்தை செல்வா முதலிலும் ஏனைய தலைவர்கள் அடுத்தடுத்தும், தொடர்ந்து தொழிலாளர், இளைஞர்கள், மாதர்கள், மாணவர்கள், விவசாயிகள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள்; ஆகியோரும், வரிசை வரிசையாக வந்து தமிழ்த் தியாகிகளின் நினைவுச் சின்னத்துக்கு மலர்தூவி அஞ்சலி செலுத்திய காட்சி அனைவரையும் மெய்சிலிர்க்கவைப்பதாக இருந்தது.

# 'சுரண்டலும், வர்க்க பேதமுமற்ற தமிழ் ஆட்சியை நிறுவியே தீருவோம்!'

## 'மே'நாள்கூட்டத்தில் 'அமிர்' ஆவேசம்!

1-5-76ல் யாழ் கோட்டை மைதானத்தில் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தினர் ஆதரவில் நடைபெற்ற மொழிவழித்தொழிற் சங்கங்களின் மேதினக்கூட்டத்தில் பருத்தித்துறை பா. உ. திரு. க. துரைத்தினம் பேசுகையில் கூறியதாவது:-

"இன்று துன்பப்படுகின்றவர்கள் தோட்டத்தொழிலாளர்களே. அவர்களைச் சுரண்டி வாழ்கின்றவர்கள் சிங்களவர் மட்டுமல்ல நம்மிடையேயும் இருக்கிறார்கள். இந்தச் சுரண்டல்கள் ஒழியவேண்டும். முதலாளிகளின் ஆதிக்கமற்ற, ஜாதி பேதமற்ற நாடே நமக்கு அமையவேண்டும் — அதற்காக சுரண்டப்படும் மக்கள் எல்லாம் ஒன்றுபடவேண்டும்.

"நாம் தேசியமயத்தை ஆதரிக்கின்றோம். ஆனால் தேசியமயம் சிங்கள மயமாவதையே எதிர்க்கிறோம். இதற்காக நாம் தந்தை செல்வாவின் தலைமையில் ஒன்றுபட வேண்டும். ஆனால் இளைஞர்களுக்கு கடமை, கண்ணியம் கட்டுப்பாடு வேண்டும்; இவற்றை ஏற்று இயங்க அவர்கள் கற்றுக் கொள்ளவேண்டும்.

திரு. மு. சிவசிதம்பரம் அவர்கள் உரைநிகழ்த்துகையில், இற்றைக்கு 20 ஆண்டுகளாக குணசிங்கா காலம் முதல் என். எம். பெரேரா காலம் வரைக்கும்தொழிற் சங்க வளர்ச்சிக்காக இந் நாட்டில் பாடுபட்டவர்கள் தமிழர்களே. சுதந்திரம் பெற்ற நாடுகளில் வர்க்க சுதந்திரம் பெறவேண்டும் என்பதற்காகவும், தொழிலாளர்கள் போராடுகிறார்கள். ஈழத்தில் தமிழர்களாகிய நாமோ அரசியல் சுதந்திரம் பெறவேண்டும் என்பதற்காகப் போராடுகிறோம்; எனவே முதலில் இந்தப் போராட்டத்தில் நாம் வெற்றிபெறவேண்டும்.

சுதந்திரப்போர்களில் எல்லாம் தொழிலாள வர்க்கம் தான் முக்கிய பங்கெடுத்திருக்கின்றன. எனவே எமது சுதந்திரப் போராட்டத்தில் தொழிலாளர் முக்கிய பங்கெடுக்கவேண்டும். நாம் அமைக்கவிருக்கும் தமிழ் ஈழத்தில் தொழிலாளி முதலாளி பேதமற்ற சோஷலிச ஆட்சியை உருவாக்குவோம்." என்று கூறினார்.

அவரைத்தொடர்ந்துதமிழர் கூட்டணி செயலாளர் நாயகம். நாவலர் அ. அமிர்தலிங்கமவர்கள் தனது உரையில் கூறியதாவது:-

"கொழும்பில் சிங்களத் தொழிலாளர்கள் விழா எடுக்கிறார்கள். இங்கு தமிழ் தொழிலாளர்கள் விழா எடுக்கிறார்கள்—இங்கிருந்து குறைந்தசெலவிலே பஸ் வண்டிகளிலே கொழும்புக்கு விழாவிற்கு சென்றவர்கள், அங்கு தொழிலாளர்களின் உரிமைக் குரலெழுப்பச் சென்றவர்களல்ல. தம் முதலாளிமாரின் கட்டளைப்படி சென்றவர்களே.

கம்யூனிஸ்ட் கட்சிக்காரரோடு கூட்டுறவுச் சங்கங்களின் தொழிலாளர்கள் சென்றுள்ளார்கள். இவர்களின் தொழில்கள் நிரந்தரமற்ற நிலைமையில் இருப்பதால்—"இம் —என்றால் வனவாசம் ஏன்? என்றால் வெளியேற்றம் என்ற நிலையில் இருப்பதால்- தம்எஜமானவர்களுக்குப் பயந்து தமது வேலையைக் காத்துக்கொள்ளச் சென்றவர்களே அதிகம் என்றார்.

தொடர்ந்தும் அவர் தமது உரையில் கூறியதாவது. "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனைசெய்வோம் வீணில் உண்டுகளித்திருப்போரை நிந்தனை செய்வோம்; "எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள் என்று வாழ்பவர்கள் தமிழர்கள்.

இன்று தோட்டத் தொழிலாளர்கள் பிச்சை எடுக்கின்றார்கள். பசிக்கொடுமையால் கற்பையும் விற்கிறாள் தோட்டத் தொழிலாளித் தாய்—ஆனால் இவர்களுக்கு நிவாரணம் ஏதுமின்றி மிகக் கேவலமான முறையில் வாகனங்களில் ஏற்றப்பட்டு நடுக்காட்டினிலே கொண்டு சென்றுவிட்டு வருகிறார்கள்.

உடற்பலம், மூளைபலம், இரண்டையும் ஒருங்கே கொண்டவர்கள் தமிழ்த் தொழிலாளர்கள். எமது உரிமைகளை நிலைநாட்ட நாம் ஒன்றிணைதல் வேண்டும்—நாடற்றவன் என்ற நிலையை ஒழிக்க வேண்டும். உரிமை கோர, உரிமை பெற தமிழ் தொழிலாளர் ஆளும் இனமாக மாறவேண்டும என்றே தமிழர் கூட்டணி அழைக்கிறது. நாம் ஒன்றுகூடி "சுரண்டலும் வர்க்கபேதமுமற்ற தமிழ் ஆட்சியை நிறுவுவோம்" இம்மேநாளில் அகிலத்துக்கு எடுத்துரைப்போம் எனக்கூறிமுடித்தார்.

மேலும் இக்கூட்டத்தில் மா. செ. செல்லத்தம்பு பா. உ., கா. பொ. இரத்தினம் பா. உ. அடலேறு ஆலாலசுந்தரம், திருமதி. மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், ரகுபதி பாலசிறீதரன் உட்பட பல தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளும் உரைநிகழ்த்தினர். செல்வி திலகவதிகணபதிபிள்ளையின் தமிழ்த்தாய் வாழ்த்துடன் ஆரம்பமாகிய இக்கூட்டம், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கத்தின் தமிழீழ வாழ்த்துப்பாவுடன் முடிவடைந்தது. இக்கூட்டத்திற்கு அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தலைவர் திரு. க. சோதிலிங்கம் தலைமைதாங்கினார். கிருஷ்ணபிள்ளை வரவேற்புக் கூறினார்.

## 1977-லும் தேர்...

—1-ம் பக்கத் தொடர்

என். பி. ஆட்சிக்கு வராமல் தடுப்பதிலேயே ஆர்வம் காட்டுவதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்.

திரு. இலங்கரத்தினாவின் இந்தக்குறிப்புப் பற்றி நமது ஆபீஸ் பையனிடம் கேட்டபோது அவன் பின்வருமாறு கூறினான்:-

"இன்றைக்கு எம். பி. மாரைவிட கட்சி அமைப்பாளர்கள் என்று கூறிக் கொள்வோருக்குத் தானே இராசயோகம்? எம். பி. என்ற பட்டம் இல்லாமலே —பொதுத்தேர்தலில்தோற்கடிக்கப்பட்ட அவர்கள் தானே திமிர் பிடித்து கொட்டம் அடிக்கிறார்கள்? தங்கள் வாழ்வை வளமாக்கவும், பொதுமக்களின்சொத்தைப் பசியாறவும், ஊரையடித்து உலையில் போடவும் அவர்களுக்கு அவர்களது கட்சி அதிகாரத்திலிருந்தால் தானே வாய்ப்பு? பொதுத்தேர்தல் நடத்தினால் ஆளுங்கட்சி மண் கவ்வும். ஆளுங்கட்சி மண்கவ்வினால் இவர்களுக்குப் பிழைப்புக்கு ஏது வழி? அதனால் தான் தேர்தலே நடத்தாமல் தங்கள் கட்சியை ஆட்சிக் கட்டிலில் ஒட்டவைத்துக்கொள்ளப் பார்க்கிறார்கள். இது புரியாமல் இலங்கரத்தினா தனது கட்சிக்காரர்களுக்கு குஞ்சம் கட்டுகிறார் விளக்குமாற்றுக்கு குஞ்சம் கட்டியது போல!"

## தமிழ் ஈழத்தின்..

—1-ம் பக்கத் தொடர்

நடைபெற்றன. கிருஷ்ணமூர்த்தி குழுவினரின் இன்னிசை, கண்ணன் கோஷ்டியினரின் மெல்லிசை, நாச்சிமார் கோவில் கணேசன் குழுவினரின் நாதஸ்வரக் கச்சேரி ஆகியவை அடுத்தடுத்து நடந்து பண்ணும், பாடலுமாக அவ்விடம் எழுச்சியுடன் காணப்பட்டது. ஊர்வலத்தில் கலந்து கொள்வதற்காக வந்திருந்த ஆண்களும் பெண்களும் விவசாயிகளும், தொழிலாளர்களும், மாணவரும், மாதர் அணியினரும், இளைஞர் பேரவையினரும் நிறைந்து காணப்பட்டனர்.

இதையடுத்து பிற்பகல் 4 மணிக்கு ஊர்வலம் ஒன்றாக அணிவகுக்கப்பட்டு ஆரம்பமாயிற்று இந்த அணிவகுப்பு ஏற்பாடுகளை அ. எ. வி. சங்க செயலாளர் இ. பேரின்பநாயகமும், அடலேறு மு. ஆலாலசுந்தரமும் கவனித்தனர்.

ஊர்வல ஆரம்பத்தில், ஒலிபெருக்கி பூட்டப்பட்ட ஊர்தியொன்றில் அமர்ந்தபடி வாலிபர்கள் சிலர் இன எழுச்சி முழக்கங்களை எழுப்பியபடி வர—அதன் பின்னர் தொழிலாளர்கள் விவசாயிகளின் தோழரும், உடுவில் பா. உ. வுமான திரு. வி. தர்மலிங்கம் சைக்கிள் ஒன்றை தாமே ஓட்டியபடி சைக்கிள் ஊர்வலத்துக்கு தலைமைதாங்கி வந்தார். அதைத் தொடர்ந்து சாவகச்சேரி பா. உ. வி. என். நவரத்தினம் மாட்டு வண்டியொன்றை ஓட்டியபடி வர, அவருக்கு அருகே பருத்தித்துறை பா. உ. திரு. க. துரைரத்தினமும் உட்கார்ந்திருந்தார். தொடர்ந்து தாரை, தப்பட்டை கரகம், காவடியாட்டங்கள் வந்தன.

இதைத்தொடர்ந்து உழவு இயந்திரங்களில் விவசாயிகளும் இளைஞர்களும் எழுச்சி முழக்கம் எழுப்பிவர—தொடர்ந்து தமிழ் இளைஞர் பேரவையினர் அணிவகுத்து வந்தனர். இந்த அணிவகுப்புக்கு தமிழ் இளைஞர் பேரவையின் இடைக்கால அமைப்பாளரான திரு. ஆ. இரகுபதிபாலசிறீதரன், பீட்டர்பொன்கலன் போன்றோர் தலைமை தாங்கி வந்தனர். அதைத் தொடர்ந்து வந்த தொழிலாளர் அணிக்கு தந்தை செல்வா, நாவலர் அமிர்தலிங்கம், உடுப்பிட்டி சிவா, அ. எ. வி. சங்கத் தலைவர் திரு. க. சோதிலிங்கம், இ. பேரின்பநாயகம், தமிழ் தொழிற் சங்கங்களின் கூட்டணித் தலைவர் திரு. நமசிவாயம், வவுனியா பா. உ. திரு. சே. மா. செல்லத்தம்பு, வி. ஆனந்தசங்கரி, பண்டிதர் இரத்தினம், சட்டத்தரணி வெ. யோகேஸ்வரன் ஆகியோர் தலைமை தாங்கி வழி நடத்திவர, இறுதியில் உரும்பராய் தந்த மாவீரன் சிவகுமாரனின் அன்னை திருமதி அன்னலட்சுமி பொன்னுத்துரை, திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் ஆகியோர் தலைமையில் மகளிர் அணி ஊர்வலத்தில் வந்த காட்சி பேரெழுச்சியை யூட்டுவதாக இருந்தது.

பிற்பகல் 4.மணிக்கு தொடங்கிய இந்த ஊர்வலம் கூட்டமைதானத்தை சென்றடைய 6 மணியாயிற்று. ஊர்வலத்தின் நீளம் சுமார் ஒருமைல் இருக்கும்.

யாழ் பெரிய கடை வீதியிலிருந்து [illegible] தந்தை செல்வா அவர்கள் நடந்து வந்தது குறிப்பிடத்தக்கது.

வீட்டுத் தூய்மைக்குச் சிறந்த வழி!
நுளம்பு, இலையான் தொல்லை நீங்க ஒரே வழி!
நீம் சுகாதார தூபம் பாவிப்பதே
ஒரு பைக்கற் -/25 சதம் மட்டுமே.
மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்
த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டாரால் கொழும்பு - 12 பண்டாரநாயகா வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1976-ம் வருடம் மே மாதம 5-ந் திகதி புதன் கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org